# மாற்று பாலின மக்களின் உரிமைகள் குறித்து
# உச்ச நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு

**மொழிபெயர்ப்பு : தினேஷ் (அமோகா)**

## தீர்ப்பின் பகுதி: செயல்படுத்த வேண்டியவை

*ஆதலால் இவ்வாறு அறிவிக்கிறோம்:*

1. பாரளுமன்றம் மற்றும் சட்டமன்றம் இயற்றிய சட்டங்கள் மற்றும் இந்திய அடிப்படை அரசியல் சட்டம் பகுதி III-ன் கீழ் வழங்கும் உரிமைளை பாதுகாக்கும் பொருட்டு 'ஹிஜ்ராஸ்', 'யுனக்ஸ்' [திருநங்கைள்], இரு பாலினமும் அல்லாத மக்கள் 'மூன்றாம் பாலினமாக' கருதப்படுவர்.

2. திருநங்கைகள் மற்றும் திருநம்பிகளின் சுய-அடையாள பாலினத்தை முடிவு செய்யும் உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் ஆண், பெண், மூன்றாம் பாலினம் போன்று அவர்களின் பாலினத்திற்கும் சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்க வேண்டும்.

3. மத்திய மற்றும் மாநில அரசுகள் அவர்களை சமூகம் மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய வகுப்பை சார்ந்த குடிமக்களாக கருத நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மேலும் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் அனைத்து வகையான ஒதுக்கீடுகளையும் வழங்க வேண்டும்

4. திருநங்கைகள் மற்றும் திருநம்பிகள் பல பாலியல் நலம் சார்ந்த பிரச்சனைகளை சந்திப்பதால் மத்திய மற்றும் மாநில அரசுகள் தனிப்பட்ட எச். ஐ. வி சதவிகித கணக்கெடுப்பு மையங்கள் நிறுவ வேண்டும்

5. திருநங்கைகள் மற்றும் திருநம்பிகள் சந்திக்கும் பயம், அவமானம், பாலின குழப்பம், சமூக நிர்பந்தம், மன அழுத்தம், தற்கொலை எண்ணங்கள், சமூக கறை போன்ற பிரச்சனைகளை மத்திய மற்றும் மாநில அரசுகள் அவசியமாக தீர்க்க வேண்டும்

6. திருநங்கைகள் மற்றும் திருநம்பிகளுக்கு மருத்துவ கவனிப்பு வழங்க மற்றும் அவர்களுக்கென தனி பொது கழிப்பிடங்கள் மற்றும் மற்ற சேவைகள் வழங்க மத்திய மற்றும் மாநில அரசுகள் போதிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்

7. மத்திய மற்றும் மாநில அரசுகள் அவர்களின் மேம்பாட்டிற்காக பல்வகை சமூக நல திட்டங்களை வடிவமைக்க வேண்டும்

8. திருநங்கைகள் மற்றும் திருநம்பிகள் அவர்களும் இந்த சமூகத்தில் ஒரு அங்கம் என நினைக்க வேண்டும் பிறர் அவர்களை தீண்ட தகாத மக்களாக பார்க்க கூடாது. இதுகுறித்து மத்திய மற்றும் மாநில அரசுகள் பொது விழுப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டும்

9. மத்திய மற்றும் மாநில அரசுகள் அவர்கள் ஒரு காலத்தில் சமூகத்தில் அனுபவித்த மரியாதை மற்றும் இடத்தை திரும்ப பெற நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்

10. திருநங்கைகள் மற்றும் திருநம்பிகள் சந்திக்கும் பிரச்சனைகளை ஆழ்ந்து கண்டறிந்து அவற்றை போக்க அரசுகள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிவுறுத்த மத்திய அரசு ஒரு வல்லுநர் குழுமத்தை அமைத்துள்ளது. மேலும் அதன் பரிந்துரைகளின் அறிக்கையை குழுமம் தொடங்கப்பட்ட மூன்று மாதங்ளுக்குள் வழங்கப்பட உள்ளது. இந்நிலையில் இந்த தீர்ப்பின் அறிவுறுத்துதல்களை சார்ந்து அந்த பரிந்துரைகள் பரிசோதிக்க பட்டு ஆறு மாதங்களுக்குள் செயல்படுத்த வேண்டும்

ORINAM.NET
orinam

For further documentation, including the full-text of the judgement, go to http://orinam.net/resources-for/law-and-enforcement/nalsa-petition-tg-rights-india/